படிவம் (இலக்கம் 02)

පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා - 290

ආයතනයේ නම - රාජ්‍ය සේවා කොමිෂන් සභාව

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119 (4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடரிலக்கம் - 290

நிறுவனத்தின் பெயர் - அரசாங்க சேவை ஆணைக்குழு

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119 (4) இன் கீழ் நிறுவனங்களிற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களையும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளையும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்.

Parliamentary Series No - 290

Name of the institution - Public Service Commission

Submission of observations of the Hon. Minister in charge of the institutions and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119 (4)

படிவம் (இலக்கம் 01)

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடரிலக்கம் - 290
நிறுவனத்தின் பெயர் - அரசாங்க சேவை ஆணைக்குழு

குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுக	திருத்தம் செய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் நடைமுறை நிலைமை
முதலாவது பகுதி : 96.00 அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினை வர்ணம் தீட்டப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் ஆகக் குறைந்தது இரண்டு கூட்டங்களையேனும் நடாத்தியிருக்கவில்லை.	சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறு அனைத்து ஒதுக்கப்பட்ட வாகனங்களிலும் அரச இலச்சினைகளை வர்ணம் தீட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தயவுடன் அறியத் தருகிறேன். 2020.08.23 ஆம் திகதியிலிருந்து 2021.12.23 ஆம் திகதி வரை உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாகியுள்ளமையால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு செயற்படவில்லை.
இரண்டாவது பகுதி : 42.00 நிறுவனத்தின் கணக்குகள் குறித்த கணக்காய்வு அபிப்பிராயமானது மறுப்பு அல்லது பாதகமான மட்டத்தில் காணப்பட்டது. நிறுவனமானது தனது விடயப் பரப்பிற்கு அமைய நிலைபேறான நோக்கங்களை இனங்கண்டிருக்கவில்லை. இனங் காணப்பட்ட நிலைபேறான நோக்க இலக்குகளின் அடைவினை அளவிடுவதற்கு செயலாற்றுகை இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. இனங் காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றத்தை அளவிடுவதற்கு சுட்டிகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்கள் மூலம் வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புக்களின் அளவானது 50% ஐ விடக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2020.08.28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 12.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணி தெளிவாகும் வகையில் அதன் முன்னேற்றத்தை அளவிடக் கூடிய 03 செயலாற்றுகை சுட்டிகள் இனங் காணப்பட்டிருக்கவில்லை.	நிறுவனத்தின் கணக்குகள் குறித்த கணக்காய்வு அபிப்பிராயமானது மறுப்பு அல்லது பாதகமான அபிப்பிராயமாக வெளிப்படுத்தப்படவில்லை என்பதோடு, "முனைப்பழியுள்ள அபிப்பிராயம்" வழங்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் வகையில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விடயப் பரப்பின் தன்மைக்கு அமைய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங் கண்டு அதனை அடைவதற்கான முன்னேற்றத்தை அளவிடுவதன் பொருட்டு சுட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அரச நிதி சுற்றறிக்கை 02/2020 இன் 12.1 ஆம் பந்தியில் நிறுவனத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணி தெளிவாகும் வகையில் அதன் முன்னேற்றத்தை அளவிடக் கூடிய 03 செயலாற்றுகை சுட்டிகள் தொடர்பில் குறிப்பிடப்படவில்லை. எவ்வாறாயினும், 2023 ஆம் ஆண்டின் செயற் திட்டத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்தின் அந்தந்தப் பிரிவுகளினால் நிறைவேற்றப்படும் பணிகளுக்கு ஏற்புடையதாக செயலாற்றுகை சுட்டிகள் இனங் காணப்பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டில் நிலவிய கொரோனோ தொற்று நிலைமை காரணமாக அரச உத்தியோகத்தர்களை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சேவைக்கு அழைத்தமையால் குறித்த காலப்பகுதியில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிட்டவாறு நடாத்துவதற்கு முடியாமற் போயினும் சேவையின் தேவை நிமித்தம் வேறு நிறுவனங்களினால் நடாத்தப்பட்ட பயிற்சி செயலமர்வுகள் மற்றும் நிகழ்நிலை பயிற்சி செயலமர்வுகளுக்கு உத்தியோகத்தர்களைப் பங்குபற்றச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

டப்ளியூ.எச்.எம்.எம்.சீ.கே.தயாரத்ன
செயலாளர்
அரசாங்க சேவை ஆணைக்குழு
பிரதிகள் -

01. பிரதமரின் செயலாளர்
02. தலைவர் - அரச கணக்குகள் குழு

} தேவையான நடவடிக்கைகளுக்காக மற்றும் தயவான தகவலுக்காக